நம்பிக்கையின் குடும்பம்

# இதுவே எமது நம்பிக்கை இதுவே எங்கள் மன்றாட்டு

ரொரன்ரோ மறை மாவட்டத்தையும் அதன் 225 பங்குகளையும் வலுவூட்டி, திருநெறிப்படுத்தி வளமுறச்செய்வதற்கான இப்பாரிய முயற்சிக்கு ஆகக் குறைந்தது $105 மில்லியன் நிதியாக சேர்க்க வேண்டிய தேவையுள்ளது.

## எமது நம்பிக்கையின் குடும்பத்தை வலுப்படுத்துவதற்கு: $50 மில்லியன்

எமது நம்பிக்கையின் குடும்பத்தின் இளம் அங்கத்தவர்கள் மட்டில் எமக்குப் பாரிய கடமையுண்டு. திருவழிபாட்டு வாசகர்களாகவும், இளைஞர் பணியாளர்களாகவும், பங்குச்சபை அங்கத்தவர்களாகவும், சமூக நீதியின் சாட்சிகளாகவும் எமது பங்கு மக்களின் வாழ்விற்கு செழுமையும் நிறைவும் ஊட்டும் எமது இளைஞர்களை நாம் என்றும் பாராட்டுகின்றோம்.

## எமது அடிப்படைகளை வலுவாக்கல்: $55 மில்லியன்

ஆன்மீக சமூக செயற்பாடுகளின் நடுவமாக விளங்கும் எமது பங்குத்தளங்கள் அன்புப் பணி புரிய எமை அழைக்கும் நற்செய்தியின் பிரதிபலிப்பாகும்.




### பங்குத்தளம் சார்ந்த இளையோர் பணி

குறைவான வளம் உள்ள பங்குகளுக்கு இளைஞர்களை நெறிப்படுத்தும் பணியாளர்களை நியமிப்பதற்கு ஆண்டுதோறும் நிதியுதவியை நாம் வழங்குவோம். பல இடங்களில் அயலில் உள்ள பங்குகள் தமது ஆளணி வளங்களையும் பகிர்ந்து கொள்வார்கள். இதற்கான முழுத்தொகை $5 மில்லியன்.



ரொரண்டோ இளையோர் கத்தோலிக்க உயர்மறை இயக்குஞராக தந்தை பிராங் (வலது) போர்டெலி உள்ளார்.

### வளாகப்பணியும் வளர்ந்த இளைஞர்களுக்கான பணியும்

எமது மறைமாவட்டத்தில் இரண்டாம் நிலைக்கு அடுத்த உயர் கல்வி நிறுவனங்களில் 400,000 க்கும் மேலானவர்கள் முழுநேர, பகுதி நேர மாணவர்களாகக் கற்று வருகின்றனர். தற்பொழுது 7 கல்விசார் வளாகங்களில் திருப்பணியகங்கள் செயற்படுகின்றன. இவ்வளாகங்களில் காத்திரமான கத்தோலிக்க பிரசன்னத்தை மெருகூட்டி வளர்ப்பதற்கு $5 மில்லியன் தேவை.



இளம் சமுதாயத்தவர்களைஇயேசுகிறிஸ்துவின் உண்மையான பாதையில் வழிநடத்துவதற்கு தோன்கில்லிலுள்ள புனித சூசையப்பர் பங்குசபைச் சபை அங்கத்தவரான வலேட் மமாடலோ உள்ளார்.

### எமது நம்பிக்கையை எடுத்துரைத்தல்

எமது இணைய வலைத்தளமும், ஏனைய சமூக ஊடகக் கருவிகளும் கத்தோலிக்க சமூகத்திற்கு அறிவும் ஆன்மீக வளர்ச்சியும் ஊட்டும் இயங்கு நிலைகொண்ட தகவல் வளங்களாக செயற்படும். கத்தோலிக்க சமூகத்தின் ஒருமித்த குரலை வளமூட்டுதற்கு $1.5 மில்லியன் வழங்குவோம்.

ஒருமித்த பார்வையும் இணைய ஏற்புடமையையும் உறுதி செய்வதற்கு நாம் அனைத்து பங்குகளுடனும் இணைந்து பணியாற்றுவோம். வன்பொருள், மென்பொருள், தொடர்பேணுகை மற்றும் உதவி ஆதரவு போன்றவைக்கென $1.5 மில்லியன் முதலீடு செய்யவுள்ளோம்

நம்பிக்கைப் பகிர்வு நடுவங்கள் பத்துப் பங்குகளால் முன்னெடுக்கப்படும். அங்கு பொதுநிலைப் பணியாளர் பயிற்சி பெறவும், பங்குமக்கள் விரிவுரைகளைக் கேட்கவும், பல குருக்களுடனும் உரையாடவும் வாய்ப்புகள் ஏற்படும். இவ்வகையிலான வளங்களையும் தொழிநுட்ப உதவிகளையும் வழங்குவதற்காக $ 1.5 மில்லியன் ஒதுக்கப்படும்.

திருமறைப்பணி மொழிபெயர்ப்புகளை வளமூட்டி பல்வேறு மொழிகளிலும் பங்குமக்களுக்கு “நற்செய்தியினை” வழங்குவதற்காக $ 2 மில்லியன் முதலிடப்படும்.



ஸ்கைப் ஊடாக கனடாவிலுள்ள இளைஞர்களுடன் கருதினால் ஆயர் தோமஸ் கொலின்ஸ் அவர்கள் உரையாடி வருகின்றார்.

### கத்தோலிக்க உருவாக்கமும் தலைமைத்துவ வளர்ச்சியும்

அருட்சாதனபயணத்தில் குடும்பங்களும் பாடசாலைகளும், பங்குகளும் காத்திரமான பங்காளிகளாகும். அருட்சாதன வாழ்வின் வளர்ச்சிக்கும், வளர்ந்தோர்களின் அருட்சாதன மற்றும் நம்பிக்கை வாழ்வின் உருவாக்கத்திற்கும் இதற்கான ஆளணி மற்றும் கற்கை வளங்களுக்குமாக $500.000 வழங்கப்படும்.

பலரது பாராட்டையும் பெற்ற “நல்ல தலைவர்கள் நல்ல ஆயர்கள்” உருவாக்க நெறித் திட்டமிடல் உள்ளடங்கலாக குருக்களுக்கு பயிற்சி பட்டறைகள் வழங்கப்படும். அர்ப்பணமுள்ள பணியாளர் ஒருவரது உதவியுடன் ஈடுபாடு நிறைந்த நிகழ்ச்சி திட்டத்தை நிறைவேற்ற $ 2 மில்லியன் தேவைப்படும்.

எமது பங்குகளில் பொதுநிலையினரின் மறைப்பணிப் பங்களிப்பின் விகிதாசாரத்தை 25 லிருந்து 35க்கு உயர்த்துவதே எமது நோக்கமாகும். கடனாகவும் உதவியாகவும் வழங்க மொத்தம் 3 மில்லியன் டொலர்கள் இதற்காக ஒதுக்கப்படும்.

அரசாங்கத்தினதும் தனியாரின் நிதி வழங்கல்களிலும் இயங்கும் பாடசாலைகளில் குடும்பங்கள், பங்குகள், மறைக்கல்வி ஆசிரியர்கள் ஆகியோரினதும் கூட்டு முயற்சியை விரிவுபடுத்துவோம். ஆசிரிய வளங்களையும் கற்கைப்பயிற்சிச் சாதனங்களையும் ஒன்றிணைந்து வழங்க $ 2 மில்லியன் ஒதுக்கவுள்ளோம்.



துயருற்றவர்களுக்கு ஆறுதல் வழங்கும் திருப்பணி சார்ந்த பயிற்சிநெறிகளை வழங்கிவரும் சொலினா அமறால் எமது ரொரண்டோ மறைமாவட்டத்தின் சீடத்துவ உருவாக்கல் பிரிவின் நெறியாளருள் ஒருவராவர்.

### பங்கு வாழ்வும் உள்ளகத்திட்டங்களும்

இப் பிரச்சாரம் வழியாக சேரும் பெரு நிதித் தொகையில் கணிசமான பகுதி உள்ளகத் தேவைகளுக்கென வழங்கப்படும். பங்குத்தளத் திட்டங்களுக்கென $ 26 மில்லியன் ஒதுக்கப்படும். ஆன்மீக அருட்சாதன வாழ்வில் அனைத்துப் பங்குமக்களும் பங்கு பற்றுவதை வரவேற்று உட்கட்டமைப்புகளை உருவாக்கவும் இந்நிதியுதவி ஓர் ஊக்கியாக அமையும். தாம் வழிநடத்தி பணியாற்றுகின்ற திருக்கூட்டத்தை ஊக்குவித்து வளர்ப்பதற்கான திட்டங்களை ஒவ்வொரு பங்குக் குருவும் முன்னெடுப்பார்.



வடயோக்கிலுள்ள புனித அன்றூா கிம் பங்குக் கோவிலின் இணைப்பங்குத் தந்தை. அருட்திரு மத்தியாஸ் கிம் கூறுகின்றார். “நாம் என்றும் பொங்கி வழிகின்றோம்.”



எட்டுக் கத்தோலிக்க பாடசாலைகளிலிருந்து வரும் இளைஞர்களுக்கு மார்க்கம் உப நகரிலுள்ள உயிருட்டமிக்க புனித பத்திரிசியார் பங்குத்தளத்தை நெறிப்படுத்தும் பங்குக்குரு டோமினிக் பாபர்.



கனடிய கத்தோலிக்க உயிர்சார் அறநெறியியல் நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குஞராக கலாநிதி மொய்றா மைக்குவின் செயலாற்றுகின்றார். அறிவாற்றல், பேச்சுவன்மைமிக்க, பொதுநிலையினரின்குரல் பொது வாழ்வில் மிக முக்கியமானதொன்றாகும்.

### புனித மைக்கல் திருஆசனப் பேராலயம்

ரொரோண்டோ மறைமாவட்டத்தின் தாய-ாலயமாகவும் கனடாவின் மிகப் பெரிய நம்பிக்கைக் குடும்பத்தின் ஆன்மீக நடுவமாகவும் விளங்கும் புனித மைக்கேல் திருஆசனப் பேராலயத்தின் எழிலைப் பாதுகாத்து அதன் பாவனையைப் பலப்படுத்துவதற்காக பல்வேறு திருத்த வேலைகளையும் புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

$ 25 மில்லியன் முதலீடு வழியாக இவ்வாலயத்தை ரொரண்டோ மறைமாவட்டத்தின் பெருமைமிகு கத்தோலிக்க பேரொளியாகவும் எமது இல்லமாகவும் பாதுகாப்போம்.

### புதிய பங்கு ஆலயங்கள்

2000 ஆண்டு முதல் 14 தேவாலயங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டன, நாம் தொடர்ந்து வளர்கின்றோம். ஒரு புதிய தேவாலயத்துக்கான நிலத்தை வாங்குவதற்கும் அதற்கான கட்டிட நிர்மாணத்திற்குமான செலவுகள் $11 மில்லியன் தொடக்கம் $14 மில்லியன் டொலர் வரையாகும். நாம் முன்கூட்டியே பங்குகளில் இச்செயல்முறையைத் தொடங்குவதற்கு கட்டுமான உதவியாக $20 மில்லியன் மூலதனமாக நிறுவ வேண்டும்.




2000 ஆண்டுமுதல் ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய ஆலயத்தைக் கட்டியெழுப்பியுள்ளோம். இந்த நிலை தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏற்கனவே உள்ள தேவாலய உடமைகள்

சில பங்குகளில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க, புனித இடங்களை பாதுகாப்பதற்கு நிதி வசதிகள் போதாமலுள்ளது. அரசாங்க சட்டதிட்டங்களுக்கமைய எமது பழைய கட்டிடங்கள் பலவற்றில் பாரிய சீரமைப்புகள் தேவைப்படுகிறது. ஆலய சொத்துக்களின் அதிமுக்கிய நிர்மாணப் பணிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய $10 மில்லியன் முதலீடு செய்ய வேண்டிய தேவையுமுள்ளது.



பணியாளரான வேனும் நீற்றா பீச்சும் ஒசோவாவிலுள்ள புனித சூசையப்பர் ஆலயத்தை தினமும் காலையில் திறக்கிறார்கள்.

ரொரண்டோவின் பேராயர் கருதினால் தோமஸ் கொலின்ஸ் கூறுகின்றார்: “எமது மேய்ப்புப்பணித் திட்டமும் எமது நம்பிக்கையின் குடும்ப பிரச்சாரமும் இறைவனை அன்பு செய்து அந்தஅன்பை பிறர்பணியில் வெளிக்காட்ட யேசு எங்களை அனுப்பிவைத்த மறைப்பணியை திறம்படச்செய்ய உதவும்.”

ரொரண்ரோ மறைமாவட்ட மறைபணிப் பெருந்திட்டம் பற்றிய தகவல்களை எமது வலைய இணையத்தளத்தில் பார்க்கலாம்.

www.archtoronto.org/pastoral

# எங்களுடன் சேருங்கள்!

நம்பிக்கையின் குடும்ப பிரச்சாரம் கனடாவில் முன்னொருபோதும் நிகழாத நிதி திரட்டும் பெருமுயற்சியாகும். எங்கள் நம்பிக்கையின் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் ஆதரவு எமக்குத்தேவைப்படுகினறது. நாம் ஒரேமனத்தவராய் இறைவனுக்கும் அயலவருக்கும் சந்தோஷமாக அன்புப்பணிபுரிய இறைவன் எமது குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக.

**குறிப்பு:** அடுத்துவரும் 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் பெரும்பாலான நிதி வளங்கப்பட்டுவிடும். மேலதிக விபரங்களை எங்களுடைய இணைய வலைத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ourFamilyofFaith.ca

TAM